திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு பல் டாக்டர்.

***704 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் அரசினர் மருத்துவ மனையில் பல் டாக்டர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டல் சர்ஜன்கள் வேலையில்லாமல் யாராவது இருக்கிறார்களா ? அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் முதலிலே அவர்களுக்கு வேலை கொடுக்கப் பட்டுவிடும். இலாக்காவால் நேரடியாக வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் தாற் காலிகமாக அனுமதிக்கப்பட்டவர்கள்தான். அப்படி உடனடியாக அனை வரையும் எடுக்க முடியாது.

திரு. அ. ஆறுமுகம் : பல் டாக்டர் பகுதி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலே பல் டாக்டர் பகுதி அமைக்கப்பட்டாகிவிட்டது. வட்ட மருத்துவ மனைகளிலேதான் இனிமேல் செய்ய வேண்டும். ஐந்தாறு வட்ட மருத்துவ மனைகளில் அமைக்கப்பட விருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவை சிசிச்சைகள்.

*** 705 வினா—திரு. தி. பொன்னுமலை :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

1971-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற மொத்த ஆண், பெண் அறுவை சிகிச்சைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

1971-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண் பெண்களின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்கள்—23,516.

பெண்கள்—3,397.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்கிறவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற உதவித் தொகை யில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்,

1972 மார்ச் 25]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு குறிப்பிட்ட அளவு உதவித் தொகையை வழங்குகிறது. அதற்கு மேல் சில வகை வசதிகளைச் செய்வதற்காக மாநில அரசும் தொகை அளிக்கிறது. அதற்கு மேலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது மக்களிடமிருந்து நிதி பெற்று அதன் மூலமாக ஏழை எளியவர்களுக்கு உதவித் தொகை சேர்த்து வழங்குகிறார்கள்.

உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்,

* 706 **வினா—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70-71-ஆம் ஆண்டுகளில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

(இ) அவர்களுள் எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) & (இ): 1969-70-71 ஆகிய மூன்றாண்டுகளில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் வழக்குகள் தொடரப்பட்டோர், தண்டிக்கப்பட்டோர் ஆகியவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

வட்டத்தின் பெயர்.	ஆண்டு.	வழக்குகள் தொடரப் பட்டவர்களின் எண்ணிக்கை.	தண்டிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
செஞ்சி	1969	16	15
ஷை	1970	6	3
ஷை	1971	3	3
திண்டிவனம்	1969	16	16
ஷை	1970	15	15
ஷை	1971	11	10

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இப்படி உணவுக் கலப்படத்தை பெரிய வியாபாரிகள்தான் செய்கிறார்கள். கலப்படம் செய்வதால் பொதுமக்களுக்கு எவ்வளவு சுகாதாரக் கேடு வருகிறது என்பதை அரசு அறிகிறது. கலப்படம் செய்கிறவர்களைத் தண்டிப்பதோடு அவர்களுடைய கடைகளையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்ய அரசு முன்வருமா ?